රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
அரச கணக்குகள் திணைக்களம்
**Department of State Accounts**

මගේ අංකය / எனது இல. / My No.
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 01.12.2014

**அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் : 239/2014**

அமைச்சின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்

**<u>ஒதுக்கீட்டுக் கணக்கு - 2014</u>**

சகல அமைச்சுக்களினதும் / திணைக்களங்களினதும் / மாவட்டச் செயலகங்களினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நிதி ஒழுங்கு விதிகள் 150 இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளை பின்வரும் அறிவுரைகளுக்கு அமைவாகத் தயாரித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சரியானது எனக் கையொப்பமிட்டு 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு மிகவும் தயவாய் கேட்டுக் கொள்கிறேன்.

2. **<u>ஒதுக்கீட்டு கணக்குகளைத் தயாரித்தல்</u>**

சுற்றறிக்கையின் 4 ஆவது பந்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி A4 அளவைக் கொண்ட தாளில் 2014 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெவ்வேறாகத் தயாரித்தல் வேண்டும்.

3. **<u>கணக்குகளைத் தயாரிக்கும் பொருட்டு தேவைப்படும் புள்ளி விபரத் தரவுகள்</u>**

2014.11.04 ஆம் திகதிய 238/2014 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம் இந்தத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற 2014 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குக் கூற்றுகள் மற்றும் அதனுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளில் உள்ளடங்கியுள்ள புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வழிகாட்டல்களுக்கு இணங்க ஒதுக்கீட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.



මහ භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka. General - Tel.: +94 112 484600 Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 112 484728 Fax: +94 112 473856 e-mail: dgsa@sad.treasury.gov.lk Additional Director General - Tel.: +94 112 484898
Director (Accounting & Reporting): +94 112 484747 Director (Accounting Services): +94 112 484753 Director (Systems & Training): +94 112 484733

3.1 அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டுக்காள திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றுகளிலும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள், மொத்த தேறிய ஏற்பாடுகள், மொத்தச் செலவுகள் மற்றும் தேறிய பெறுபேறு (எஞ்சியவை அல்லது மேலதிகம்) பற்றிய தகவல்கள், அமைச்சின் / திணைக்களத்தின் செலவினத் தலைப்புகளில் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் உரியதாக தயாரிக்கப்படுகின்ற 2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரத் தகவல்களுடன் இணங்குதல் வேண்டும்.

3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள் தயாரிக்கும் போது மொத்தச் செலவினம், எஞ்சியது / மேலதிகம் என்பன அண்ணளவான ரூபாய்களுக்கு மாற்றப்படல் வேண்டும்.

3.3 நி.ஓ. 66 மற்றும் நி.ஓ. 69 மாற்றல்கள் சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குக் கூற்றுகளில் குறிப்பிடப்படுவது மொத்த பெறுமதி மாத்திரமேயாகும். அந்த மொத்தப் பெறுமதிக்குரிய ஒவ்வொரு நி.ஓ. 66 மற்றும் நி.ஓ. 69 மாற்றல்கள் சம்பந்தமாக விபரமான வெளிப்படுத்துகையொன்றும் மேற்குறிப்பிட்ட கூற்றுடன் அனுப்பப்படுகின்ற அதேவேளையில், ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயரிப்பதற்கு முன்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரப் பெறுமதிகளை தொடர்புடைய மாற்றல் படிவத்தின் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

3.4 கடந்த வருடங்களில் ஒதுக்கீட்டுக் கணக்குகள் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்புகளைப் பரிசீலனை செய்யும் போது, பொதுவாகக் காணப்படுகின்ற பிழைகளாக அரச கணக்குகள் பணிப்பாளரின் கையொப்பத்தைக் கொண்ட கணக்குக் கூற்றுகள் மற்றும் அதற்குரிய இறுதி திறைசேரிக் குறிப்புகளைப் பயன்படுத்தி ஒதுக்கீட்டுக் கணக்குகள் தயாரிக்கப்படாமை, கொடுக்கல் வாங்கல்கள் கிட்டிய ரூபாய்க்கு மாற்றப்படாமை, தாமதித்து ஒதுக்கீட்டுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுகின்றமை. முழுமையற்ற வரவு விபரங்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றமை. முன்னேற்ற வருடத்தின் அசையும் சொத்துக்கள் தொடர்பான பெறுமதிகள் மூலதன செலவின தலைப்புடன் பொருந்தாமை மற்றும் முறையான விதத்தில் பொருள் ஆய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்தப்படாமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும். அதனால் இவ்வாறான தவிர்க்க முடியாத குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் தேவையான நடவடிக்கைகளை முன்வரும் காலங்களில் பின்பற்றுதல் வேண்டும்.

## 4. <u>கணக்குகளைத் தயாரிப்பதற்காக தேவைப்படும் மாதிரிப் படிவங்கள்</u>

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பின்வரும் மாதிரிப் படிவங்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதற்காக பயன்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| டீ.ஜீ.எஸ்.ஏ | 1 | - | ஒதுக்கீட்டுக் கணக்குகள் - 2014 |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 2 | - | நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்குகள் - 2014 (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 3 | - | கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம் (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 4 | - | கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம் (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 5 | - | நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் செலவின நிதியிடல் சுருக்கம் (டீ.ஜீ.எஸ்.ஏ 5(i) இன் சுருக்கத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 5(i) | - | ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திலும் கருத்திட்டத்தின் பிரகாரம் செலவின நிதியிடல் - கருத்திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 6 | - | மீண்டுவரும் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகளுக்கும் உண்மைச் செலவுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைத் தெளிவுபடுத்தல் (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 6(i) | - | மூலதனச் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகளுக்கும் உண்மைச் செலவுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைத் தெளிவுபடுத்தல் (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 7 | - | நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்று. (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 7(i) | - | புத்தகங்களிலிருந்து வெட்டி நீக்குதல் பற்றிய கூற்று. (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 8 | - | பொறுப்புக்கள் பற்றிய கூற்று. - (i) திறைசேரியின் |

| | | | |
|---|---|---|---|
| | | | அனுமதியைப் பெற்று வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நிதி தவிர (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 8 | - | பொறுப்புக்கள் பற்றிய கூற்று. - (ii) நி.ஒ. 215(3) (அ) மற்றும் (இ) இன் பிரகாரம் திறைசேரியின் அனுமதியுடன் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ஏற்பாடு (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 8 | | பொறுப்புக்கள் பற்றிய கூற்று. - (iii) நி.ஒ. 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட முறி பற்றிய கூற்று |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 9 | - | மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைகள் பற்றிய கூற்று. (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்) |
| டீ.ஜீ.எஸ்.ஏ | 10 | - | காணாமல்போன வவுச்சர் பற்றிய கூற்று. (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும்) |
| குறிப்பு | (i) | - | நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு பற்றிய அறிக்கை – 2014 |
| குறிப்பு | (ii) | - | முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் சுருக்கம் - 2014 |
| குறிப்பு | (iii) | - | கட்டுநிதி கணக்குகள் பற்றிய சுருக்க அறிக்கை 2014 |
| குறிப்பு | (iv)-(அ),(ஆ) | - | வங்கிக் கணக்குகள் நிலை பற்றிய அறிக்கை |
| டீ.ஜீ.எஸ்.ஏ | (கணக்காய்வு) | - | ஒதுக்கீட்டுக் கணக்குகளுக்காக கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்பு |

## 5. மொத்த தேறிய ஏற்பாடுகள் மற்றும் செலவு மாறுபாடு சம்பந்தமாக தெளிவுபடுத்தல்

ஒவ்வொரு செலவு விடய குறியீட்டின் கீழும் சகல செலவு விடயங்களுக்காகவும் மொத்த தேறிய ஏற்பாடுகள் மற்றும் உண்மையான செலவுகளுக்கு இடையேயான வேறுபாடு மற்றும் அந்த வேறுபாட்டிற்குரிய காரணங்கள் (டீ.ஜீ.எஸ்.ஏ 6 மற்றும் 6(ஐ) இல்) காட்டப்படுதல் வேண்டும். இந்த வேறுபாடு செலவு விடயத்தின் தேறிய ஏற்பாட்டு அளவின் நூற்றிற்கு 5 அல்லது ரூபா 10,000/- ஆகிய இரண்டு ஏதாவதொரு அல்லது கூடிய தொகையிலும் பார்க்க குறைவடையுமானால் வேறுபாட்டுக்கான காரணங்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. மாறுபாட்டுக்கான காரணிகளைக் காட்டும்போது அந்தக் காரணங்களை சுருக்கமாகவும் அதேபோன்று நியாயப்படுத்துவதற்கு தேவையான விடயங்களை உள்ளடக்கக் கூடிய விதமாகவும் தற்போது விடையளிக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு ஏற்புடையதாகவும் இருந்தால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் வேண்டும்.

## 6. ஒதுக்கீட்டுக் கணக்குகள் சமர்ப்பித்தல்

ஒவ்வொரு அமைச்சுக்காகவும்/ திணைக்களத்திற்காகவும் / மாவட்டச் செயலகத்திற்காகவும் ஒதுக்கீட்டுக் கணக்குகளை பின்வரும் விடயங்களை உள்ளடக்கி குறைந்தபட்ச செலவின் கீழ் தயாரிக்கப்பட்ட இணைந்த தொகுதியாக சமர்ப்பித்தல் அவசியமாகும்.

6.1 ஒதுக்கீட்டுக் கணக்குகளை டீ.ஜீ.எஸ்.ஏ ஐ மாதிரிப் படிவத்தின் மூலம் தயாரித்து உரிய விதத்தில் சான்றுப்படுத்தல் வேண்டும். அது கணக்கீட்டின் மூலம் சமர்ப்பிக்க வேண்டிய விபரமான தகவல்கள் யாவும் டீ.ஜீ.எஸ்.ஏ 2 முதல் 10 வரையான மாதிரிப் படிவங்கள் மூலம் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகள் வெவ்வேறாக தேவையான வகைப்படுத்தல்களுடன் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்த சகல கணக்குக் கூற்றுகளும் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடங்கியுள்ள பகுதியொன்றாக கருதப்படுகின்ற படியினால் நி.ஒ. 150 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக சரியான தகவல்கள் மற்றும் போதிய தெளிவுபடுத்தல்களை வழங்குவதன் மூலம் 2014 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் தயாரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்தந்த அமைச்சுக்களின் /திணைக்களங்களின் / மாவட்டச் செயலகங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் / கணக்கட்டு உத்தியோகத்தர்களிடம் வேண்டப்படுகின்றது.

6.2 டீ.ஜீ.எஸ்.ஏ 2 முதல் டீ.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களுக்கு மேலதிகமாக ஒதுக்கீட்டுக் கணக்குகளுக்கான குறிப்புகள் (i) முதல் குறிப்புகள் (iv) வரையான விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும். குறிப்பு இலக்கம் (i) (ii) மற்றும்

(iii) ஆகியவற்றில் உள்ளடக்கப்படுகின்ற புள்ளி விபரத் தகவல்கள் திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றுகளின் காட்டப்பட்டுள்ள புள்ளி விபரங்களுடன் ஒத்திருத்தல் வேண்டும். இந்த சகல படிவங்களையும் உரிய விதமாக பூர்த்தி செய்து பிரதான கணக்காளர் ∴ பணிப்பாளர் (நிதி)∴ ஆணையாளர் (நிதி) ஆகியோரினால் சரியென சான்றுப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அதேவேளையில், தொடர்புடைய மாதிரிப் படிவங்களில் அறிக்கையிடுவதற்காக ஏதும் இல்லாதிருந்தால் சான்றுப்படுத்தப்பட்ட "வெற்று" அறிக்கையொன்று சமர்பிக்கப்படல் வேண்டும்.

6.3 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் ஏனைய செலவினத் தலைப்புகளுக்கு மேலதிக ஏற்பாடுகளை விடுவிப்பதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் வரவு செலவு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப் பொறுப்புக்கள் எனும் செலவு விடயத்தின் கீழுள்ள ஏற்பாடுகள் பற்றிய தகவல்களை உள்ளடக் கூடிய விதமாக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்காக மாத்திரம் டீ.ஜீ.எஸ்.ஏ 11, டீ.ஜீ.எஸ்.ஏ 11(i), டீ.ஜீ.எஸ்.ஏ 11(ii) மற்றும் டீ.ஜீ.எஸ்.ஏ 11(iii) ஆகிய படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

6.4 ஒதுக்கீட்டுக் கணக்கைச் சமர்ப்பிக்கும் போது அதன் உறை மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட மாதிரிகளின் ஒழுங்கு முறைகளின் பிரகாரம் பக்க இலக்கங்களையும் உள்ளடக்கியதாக பொருளடக்கத்தையும் உள்ளடக்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்புக்கான டீ.ஜீ.எஸ்.ஏ (கணக்காய்வு) மாதிரியை தொகுதியின் இறுதியில் சேர்த்தல் வேண்டும்.

6.5 ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ 1 மாதிரியின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒதுக்கீட்டுக் கணக்குகள் மாத்திரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

## 7. <u>ஒதுக்கீட்டுக் கணக்குகளின் மாதிரிகள்</u>

டீ.ஜீ.எஸ்.ஏ 1 முதல் 10 வரையான மாதிரிகளும் இலக்கங்களும் (i) - (iv) வரையான குறிப்புகளின் மாதிரிகள் நிதியமைச்சின் http/www.treasury.gov.lk எனும் இணையத்தளத்தில் அரச கணக்குகள் திணைக்களத்தில் இணையப் பக்கத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், தேவையானால் பிரதிப் பணிப்பாளர் (அரச நிதி புள்ளிவிபரம் மற்றும் தகவல் முகாமைத்துவம்) அறிவிப்பதன் மூலம் மென்பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

8. **<u>கணக்காய்வாளர் அதிபதிக்கு கணக்குகளைச் சமர்ப்பித்தல்</u>**

கணக்காய்வாளர் அதிபதிக்கு ஒதுக்கீட்டுக் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

(I) உரிய விதமாக சான்றுப்படுத்திய பின்னர் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் மூலப் பிரதியையும் மேலும் இரண்டு பிரதிகளையும் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(II) கணக்காய்வு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகள் கணக்காய்வாளர் அதிபதியினால் பின்வரும் விதமாக அனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| (i) | மூலப்பிரதி | - அரச கணக்குகள் திணைக்களத்திற்கு |
| (ii) | முதலாவது பிரதி | - செலவினத் தலைப்புள்ள அமைச்சுக்கு, திணைக்களத்திற்கு மாவட்டச் செயலகத்திற்கு |
| (iii) | இரண்டாவது பிரதி | - கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு வைத்துக் கொள்ளும் பொருட்டு |

(III) ஒதுக்கீட்டுக் கணக்குகளை கணக்காய்வாளர் அதிபதிக்குச் சமர்ப்பிக்கும் போது அதனுடன் டீ.ஜீ.எஸ்.ஏ 8(i),8(ii) மற்றும் 8(iii) குறிப்புகளில் வெவ்வேறாக அச்சிடப்பட்ட பிரதிகள் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு (அரச நிதி புள்ளிவிபரம் மற்றும் தகவல் முகாமைத்துவம்) 2015 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னரும்,குறிப்பு இலக்கம் (i) மற்றும் (iv) மாதிரியில் வெவ்வேறான குறிப்புகள் மற்றும் டீ.ஜீ.எஸ்.ஏ 7, 7(i) மற்றும் 8(i) மாதிரிகளில் வெவ்வேறாகவுள்ள பிரதிகள் பொதுத் திறைசேரியின் கீழ் மாடியில் அமைந்துள்ள அரசாங்க கணக்காய்வு உப அலுவலகத்தில் கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

9. 2013.01.24 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை SA/AS/AA/Circular மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இணக்க அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் தொடர்பான அறிவுரைகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுக் கணக்குகளிலும் வருமானக் கணக்குகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி இணக்க அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற வருமான மற்றும் செலவினக் கணக்கு, நிதி நிலைமை பற்றிய அறிக்கை மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் ஒதுக்கீட்டுக் கணக்கினை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சம்பந்தமாக மேலும் விளக்கங்கள் தேவைப்படுமானால் இந்த திணைக்களத்தில் பணிப்பாளர் - பாரிய மற்றும் இணக்கக் கணக்குகள் (தொலைபேசி இலக்கம் 0112484753) - அல்லது பணிப்பாளர் (அரச நிதி புள்ளிவிபரம் மற்றும் தகவல் முகாமைத்துவம்) தொலைபேசி இலக்கம் 0112484649)- ஆகியோரைத் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒப்பம் : டீ.எம்.ஏ. ஹரஸ்கம
அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்
திறைசேரி பிரதிப் பணிப்பாளர் சார்பாக

பிரதி - கணக்காய்வாளர் அதிபதி

# ஒதுக்கீட்டுக் கணக்கு 2014

செலவினத் தலைப்பு இல: அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

| | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | மொத்தச் செலவினம் | தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | **மீண்டுவரும்** | | | | | | | |
| XX | | | | | | | | |
| XX | | | | | | | | |
| XX | | | | | | | | |
| XX | | | | | | | | |
| | உப மொத்தம் (மீண்டுவரும்) | | | | | | | |
| | **மூலதனம்** | | | | | | | |
| XX | | | | | | | | |
| XX | | | | | | | | |
| XX | | | | | | | | |
| | உப மொத்தம் (மூலதனம்) | | | | | | | |
| | முழு மொத்தம் | | | | | | | |

பக்க இலக்கம் ..........முதல் ......... வரை டீ.ஜீ.எஸ்.ஏ 2 முதல் டீ.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் ..........முதல் ......... உள்ளடக்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும். அதனால் மேலேயுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், அது தொடர்பான கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புடைய கணக்குகள் ஒப்புநோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை சரியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :

கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி :

# நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு 2014

**செலவினத் தலைப்பு இல:** **அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :**

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் சுருக்கம்

| செலவினத்தின் தன்மை (டீ.ஜீ.எஸ்.ஏ.மாதிரிப் படிவத்துடன்) | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டீ.ஜீ.எஸ்.ஏ. 3) | | | | | | | |
| (ஆ) மூலதனம் (டீ.ஜீ.எஸ்.ஏ.4) | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம்

**செலவினத் தலைப்பு இல:** **அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :**

| கருத்திட்ட இலக்கம் / பெயர், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்காகவுமான ஏனைய செலவினம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **<u>கருத்திட்ட இலக்கம் .... மற்றும் பெயர்: ...</u>** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | | | | | | |
| ஏனைய செலவினம் | | | | | | |
| **உப மொத்தம்** | | | | | | |
| **<u>கருத்திட்ட இலக்கம் .... மற்றும் பெயர்: ...</u>** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | | | | | | |
| ஏனைய செலவினம் | | | | | | |
| **உப மொத்தம்** | | | | | | |
| | | | | | | |
| **முழு மொத்தம்** | | | | | | |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள், குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | மொத்தச் செலவினம் | தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (3-4) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | | | | | | |
| | | | மொத்தம் | | | | | |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினத்தின் நிதியிடலின் சுருக்கம்

**அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**
**செலவினத் தலைப்பு இல:**

| | நிதியிடல் | நிகழ்ச்சித் திட்டம் 01* | | நிகழ்ச்சித் திட்டம் 02* | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு ** 1 | உண்மைச் செலவினம் 2 | தேறிய ஏற்பாடு ** 3 | உண்மைச் செலவினம் 4 | தேறிய ஏற்பாடு** 5 | உண்மைச் செலவினம் 6 | செலவினம் *** சதவீதம் (6÷5)X100 |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்நாட்டு நிதியம் | | | | | | | |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | | | |
| 13 | வெளிநாட்டு உதவி | | | | | | | |
| 14 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டுக் கடன் | | | | | | | |
| 15 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டு உதவி | | | | | | | |
| 16 | எதிர்த்தரப்பு நிதியம் | | | | | | | |
| 17 | வெளிநாட்டு நிதியிடல் சார்ந்தஉள்நாட்டுச் செலவு | | | | | | | |
| 21 | விசேட சட்டச் சேவை | | | | | | | |
| | **மொத்தம்** | | | | | | | |

* டீ.ஜீ.எஸ்.ஏ. 5 (i) இன் பிரகாரம் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் உள்ள பெறுமதிகளை உள்ளடக்கவும்.
** டீ.ஜீ.எஸ்.ஏ. 1 இல் 4 ஆவது நிரவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடு
*** தசமதானம் இன்றி % குறிப்பிடவும்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

# ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் கருத்திட்டத்தின் பிரகாரம் செலவினத்தை நிதியிடல்

**(நிகழ்ச்சித் திட்டத்தினது கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினங்களின் நிதியிடல்)**

**அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

| நிதியிடல் | | கருத்திட்டம் 1 | | கருத்திட்டம் 2 | | கருத்திட்டம் 3 | | நிகழ்ச்சித் திட்டத்தின மொத்தம் / பக்கங்களின் மொத்தம்* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11 | உள்நாட்டு நிதியம் | | | | | | | | |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | | | | |
| 13 | வெளிநாட்டு உதவி | | | | | | | | |
| 14 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டுக் கடன் | | | | | | | | |
| 15 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டு உதவி | | | | | | | | |
| 16 | எதிர்த்தரப்பு நிதியம் | | | | | | | | |
| 17 | வெளிநாட்டு நிதியிடல் சார்ந்தஉள்நாட்டுச் செலவு | | | | | | | | |
| 21 | விசேட சட்டச் சேவை | | | | | | | | |
| | **மொத்தம்** | | | | | | | | |

*நிகழ்ச்சித் திட்டங்களின் பொருட்டு மேலதிகப் பக்கங்களைச் சேர்ப்பதானால் இறுதிப் பக்கத்தின் மொத்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தமாக இருத்தல் வேண்டும்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

## மீண்டுவரும் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகளுக்கும் உண்மைச் செலவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குதல்

**(டீ.ஜீ.எஸ்.ஏ. 3 இல் 6 நிரலில் காட்டப்படுகின்றது)**

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

செலவினத் தலைப்பு இல:

| நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கம் | கருத் திட்டத்தின் இலக்கம் | உப கருத் திட்டத்தின் இலக்கமும் | செலவு விடய இலக்கம் | நிதியிடல் (குறியீட்டு இலக்கம்) | மீண்டுவரும் செலவினங்களின் விபரம் | வேறுபாடு சேமிப்பு மற்றும் (மேலதிகம்) ரூபா* | சேமிப்பின் சதவீதம்** | விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

* சுற்றறிக்கையின் 5 ஆவது பந்தியைப் பார்க்கவும்

** சேமிப்பின் சதவீதத்தை தசமதானம் இன்றிக் காட்டுக

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

# மூலதனச் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகளுக்கும் உண்மைச் செலவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குதல்

**(டீ.ஜீ.எஸ்.ஏ. 4 இல் 5 நிரலில் காட்டப்படுகின்றது)**

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

செலவினத் தலைப்பு இல:

| நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கம் | கருத் திட்டத்தின் இலக்கம் | உப கருத் திட்டத்தின் இலக்கமும் | செலவு விடய இலக்கம் | நிதியிடல் (குறியீட்டு இலக்கம்) | மூலதனச் செலவினங்களின் விபரம் | வேறுபாடு சேமிப்பு மற்றும் (மேலதிகம்) ரூபா* | சேமிப்பின் சதவீதம்** | விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

* சுற்றறிக்கையின் 5 ஆவது பந்தியைப் பார்க்கவும்

** சேமிப்பின் சதவீதத்தை தசமதானம் இன்றிக் காட்டுக

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்று

**நி.ஒ. 106 மற்றும் நி.ஒ 113 இன் கீழான நட்டம்**

**செலவினத் தலைப்பு இல:** **அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் (**

(i) **வருடத்தினுள் நட்டத்தை அறவிடுதல்/ வெட்டி நீக்குதல் / கைவிடுதல் பற்றிய கூற்றுக்கள்**

| | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| **பெறுமதி** | கீழ் | | |
| ரூபா 25,000.00 | மேல் | | |
| ரூபா 25,000.01 | | | |
| மொத்தம் | | | |

| நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளி வகை | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| மொத்தம் | | |

(ii) **தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு அல்லது கைவிடுவதற்கு இருக்கின்ற நட்டம் பற்றிய கூற்று**

| | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| **பெறுமதி** | கீழ் | | |
| ரூபா 25,000.00 | மேல் | | |
| ரூபா 25,000.01 | | | |
| மொத்தம் | | | |

**(ii) பிரகாரம் காலப் பகுப்பாய்வு**

| | | |
|---|---|---|
| 5 வருடத்திற்குக் கீழ் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | ரூபா |
| 5-10 வருடங்கள் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | ரூபா |
| 10 வருடத்திற்கு மேல் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | ரூபா |

| நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளின் வகை | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| மொத்தம் | | |

குறிப்பு - செலவினத் தலைப்பு 1701 இன் கீழ் வருடத்தினுள் கணக்கு வைக்கப்பட்ட அல்லது முன்வரும் வருடங்களில் கணக்கு வைக்கவிருக்கின்ற நி.ஒ. 106 இன் கீழிருக்கின்ற தீங்கு மற்றும் நி.ஒ. 113 இன் கீழான கைவிடுதல் பற்றிய விபரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

# புத்தகங்களிலிருந்து வெட்டி நீக்குதல் பற்றிய கூற்றுக்கள்

செலவினத் தலைப்பு இல: அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

1 **வருடத்தினுள் இடம்பெற்ற நிஒ.109 இன் கீழான நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றுக்கள்**

| | பெறுமதி | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| (i) | ரூபா. 25,000.00 இற்குக் கீழ் | ........................ | .................. |
| (ii) | ரூபா. 25,000.01 இற்கு மேல் | ........................ | .................. |
| | மொத்தம் | | |

2 **வருடத்தினுள் நி.ஒ. 109 இன் கீழ் புத்தகத்திலிருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் பற்றிய கூற்றுக்கள்**

| நட்டத்தின் தன்மை | ஆரம்பத்தில் வெட்டி நீக்காத மீதி ரூபா | நட்டத்தின் பெறுமதி ரூபா | அறவீடுகள் ரூபா | புத்தகத்திலிருந்து வெட்டி நீக்கிய பெறுமதி ரூபா | வெட்டி நீக்காத முன்கொண்டு செல்லப்படுகின்ற மீதி ரூபா | புத்தகத்திலிருந்து வெட்டி நீக்குவதற்கான அனுமதியின் தொடர்பு இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |
| **மொத்தம்** | | | | | | |

குறிப்பு - டீ.ஜீ.எஸ்.ஏ.-7 இல் உள்ளடங்கிய கணக்கு வைக்க வேண்டிய நட்டம் மற்றும் கைவிடுதல் தவிர்ந்த நி. ஒ. 109 இன் கீழான ஏனைய நட்டம் மற்றும் கைவிடுதல் மாத்திரம் இந்த மாதிரிப் படிவத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி)

திகதி :

# கடன்பொறுப்புக்கள் பற்றிய கூற்று - (i)

**( திறைசேரியின் அங்கிகாரத்தைப் பெற்று வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நிதி தவிர்ந்த)**

**செலவினத் தலைப்பு இல:** அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :**

| கடன் உரித்தாளியின் பெயர் (செலுத்துநரின் பெயர்) | பொறுப்புக்கள் பற்றிய விபரம் | இன்வொய்ஸ் இலக்கம் | கருத்திட்ட இலக்கம் | உப கருத்திட்ட இலக்கம் | செலவு விடயக் குறியீடு | நிதியிடல் குறியீடு | நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. அமைச்சு /அரசாங்கத் திணைக்களம் | | | | | | | |
| .................................. | | | | | | | XX |
| .................................. | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| 2. அரச கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டமுறைச் சபை | | | | | | | |
| .................................. | | | | | | | XX |
| .................................. | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| 3. ஏனையவை (தனியார்த் துறை) | | | | | | | |
| .................................. | | | | | | | XX |
| .................................. | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| **முழு மொத்தம்** | | | | | | | |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி)

திகதி :

# பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்கள்-(ii)
## நி.ஒ. 215 (3) (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ஏற்பாடுகள்

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

| கடன் உரித்தாளியின் பெயர் / செலுத்துநரின் பெயர்* (ஏற்பாடுகளை மாற்றும் போது அடையாளங் காணப்பட்டிருத்தல் வேண்டும்) | பொறுப்புக்கள் பற்றிய விபரம் | கடன் ஆவண இலக்கம் போன்றவை | எந்த செலவினத் தலைப்பிலிருந்துஏற்பாடுகள் மாற்றப்பட்டது | | | | மாற்றப்பட்ட தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்திட்டம் | உப கருத்திட்டம் | செலவு விடயக் குறியீடு | நிதியிடல் குறியீடு | |
| | | | | | | | |

* வெவ்வெறாக பின்வரும் விதமாக பட்டியல்படுத்தப்பட வேண்டும்.

1. அமைச்சு / அரசாங்கத் திணைக்களம்
2. அரசாங்கக் கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டமுறைச் சபைகள்
3. தனியார்த் துறை

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்கள் -(iii)

## நி.ஒ. 94 (2) மற்றும் (3) பிரகாரம்

## ஏற்படுத்தப்பட்ட முறி பற்றிய கூற்று

**அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**
**செலவினத் தலைப்பு இல:**
**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :**

| முறிகாரரின் பெயர் | முறி பற்றிய விபரம் | கருத்திட்டம் | உப கருத்திட்டம் | செலவு விடயக் குறியீடு | நிதியிடல் குறியீடு | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1. அமைச்சு / அரசாங்கத் திணைக்களம் | | | | | | |
| ..................................... | | | | | | XX |
| ..................................... | | | | | | XX |
| மொத்தம் | | | | | | |
| 2. அரசாங்கக் கூட்டுத்தாபனம் /நியதிச் சட்டமுறைச் சபைகள் | | | | | | |
| ..................................... | | | | | | XX |
| ..................................... | | | | | | XX |
| மொத்தம் | | | | | | |
| 3. ஏனையவை (தனியார்த் துறை) | | | | | | |
| ..................................... | | | | | | XX |
| ..................................... | | | | | | XX |
| மொத்தம் | | | | | | |
| முழு மொத்தம் | | | | | | |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

டீ.ஜீ.எஸ்.ஏ. - 9

# மீள்நிரப்பல் செய்யக்கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைகள் பற்றிய கூற்று

**அமைச்சின் / திணைக்களத்தின் /** மாவட்டச் செயலகத்தின் பெயர் :

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

(ரூபா)

(1) மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவியின் கீழ் குறைநிரப்பு ஒதுக்கங்கள் உட்பட 2014 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கங்கள் ..............................

(2) மேலே(1) தொடர்பாக 2014 ஆம் ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் ..............................

(3) 2014 சனவரி 01ஆம் திகதியன்று கிடைக்கவிருந்த மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

(4) 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்கள் தொடர்பாக 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் (இருப்பின்) ..............................

(5) 2014 ஆம் ஆண்டு சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

(6) 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்களுக்கான உரிமைக் கோரல்கள் தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் உதவி வழங்கும் நிறுவனத்தினால் இடமளிக்கப்படாத உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

(7) 2014 ஆம் ஆண்டு சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டினுள் உதவி வழங்கும் நிறுவனத்தினால் இடமளிக்கப்படாத உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

(8) 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்களுக்காக 2014 ஆம் ஆண்டினுள் கிடைத்த மீள்நிரப்பல்களின் மொத்தம் ..............................

(9) 2014 ஆம் ஆண்டுக்காக 2014 ஆம் ஆண்டினுள் கிடைத்த மீள்நிரப்பல்களின் மொத்தம் ..............................

(10) 2014 டிசம்பர் 31ஆம் திகதியன்று கிடைக்கவிருந்த மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

[(3+4+5) - (6+7) ] - (8+9)

(11) ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்து முடிவடைந்த திகதி வரை 2014 ஆம் ஆண்டு சம்பந்தமாக 2014 டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

(12) ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்து முடிவடைந்த திகதி வரை 2014 டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் கிடைத்த மீள்நிரப்பல்களின் மொத்தம் ..............................

(13) ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட திகதியன்று கிடைக்கவிருந்த மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் ..............................

(10+11-12)

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

# காணாமல்போன வவுச்சர் பற்றிய கூற்று

**அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

**செலவினத் தலைப்பு இல:**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :**

| திகதி | வவுச்சர் இலக்கம் | பெறுபவரின் பெயர் | கொடுப்பனவின் தன்மை | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | | | | |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

# நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு பற்றிய அறிக்கை 2014

குறிப்பு (i)

செலவினத் தலைப்பு இல. : அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :

| செலவு விடயம் மற்றும் சொத்துக்களின் தொகுதி | | சொத்துக்களின் குறியீடு மற்றும் பெயர் | 2014/01/01 திகதியன்று ஆரம்ப மீதி | வருடத்தினுள் சேர்த்தல் | | வருடத்தினுள் பயன்பாடு* | 2014/12/31 திகதியன்று மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கொள்வனவு செய்வதன் மூலம் ** | மாற்றலின் மூலம் | | |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2101 | வாகனம் | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | | | | | | |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | | | | | | |
| 2103 | பொறிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | | | | | | |
| 2104 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | | | | | | |
| 2105 | காணி மற்றும் காணி மேம்பாடுகள் | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | *..................... | | | | | |
| | | | | | | | |
| முழு மொத்தம் | | | | | | | |

(* 2004/01/01 ஆம் திகதியின் பின்னர் கைக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் தொடர்பானது.)

(** இந்த நிரலின் பெறுமதிகளின் மொத்தம் வருடாந்த ஒதுக்கீட்டுக்கணக்கின் DGSA 4 இணைப்பில் காட்டப்படுகின்ற பெறுமதிகளுக்குச் சமனாக இருத்தல் வேண்டும்..)

2014.12.31 ஆம் திகதிக்குக் காட்டப்படுகின்ற மீதி 2004-2014 வரையான வருடங்களில் கைக்கொள்ளப்பட்டதாகவும் அந்தச் சொத்துக்களிலிருந்து பயன்படுத்தப்பட்டவைகள் இருப்பின் அவற்றின் பெறுமதி, கழித்தலின் பின்னர் கிடைக்கின்ற தேறிய மீதியாகவும், அந்த மீதிகள் நிலையான சொத்துக்களின் அட்டவணையிலுள்ள பெறுமதிகளுடன் இணங்குவதாகவும், வருடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த களஞ்சிய ஆய்வுகளிலிருந்து பௌதீக நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி)/ ஆணையாளர் (நிதி)

திகதி:

# முற்பணக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் சுருக்கம் - 2014

**செலவினத் தலைப்பு இல:** **அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

| முற்பண / வைப்புக் கணக்குகளின் பெயர் | கணக்கு இலக்கம்* | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் | | | | திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2014/12/31 திகதியன்று மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | 2014/01/01 திகதியன்று ஆரம்ப மீதி | வருடத்தினுள் பற்று வைத்தல் | வருடத்தினுள் வரவு வைத்தல் | 2014/12/31 திகதியன்று இறுதி மீதி | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| I. அரசாங்க அலுவலர்களின் முற்பணம் | | | | | | |
| II. ஏனைய முற்பணங்கள் | | | | | | |
| III நானாவித முற்பணங்கள் | | | | | | |
| IV வைப்புக்கள் | | | | | | |
| (i) பொது வைப்புக்கள் | | | | | | |
| (ii) ஏனைய வைப்புக்கள் | | | | | | |

**நி.ஓ. 506 (2) இன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட முற்பணக் கணக்குகளினதும் வைப்புக் கணக்குகளினதும் இறுதி மீதியை தனியாள் கணக்குகள் தொடர்பான பட்டியலுடன் ஒப்பிட்டு, அந்த இணக்கக் கூற்றுக்களை கணக்காய்வாளர் அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.**

* வைப்புக் கணக்கு இலக்கங்களைக் குறிப்பிடும் போது திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள முழுமையான கணக்கு இலக்கத்தை உள்ளடக்க வேண்டிய அதேவேளையில், தொழிற்படாதிருக்கின்ற கணக்குகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்
திகதி :

குறிப்பு (iii)

# முற்பணக் கணக்கு பற்றிய சுருக்க அறிக்கை - 2014

**அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**
**செலவினத் தலைப்பு இல:**

| அமைச்சின் / திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் | | | | | திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2014/12/31 திகதியன்று மீதி ரூபா |
|---|---|---|---|---|---|
| கணக்கு இலக்கம் | 2014/01/01 திகதியன்று ஆரம்ப மீதி ரூபா | வருடத்தினுள் மொத்தமான பற்று வைத்தல் ரூபா | வருடத்தினுள் மொத்தமான வரவு வைத்தல் ரூபா | 2014/12/31 திகதியன்று இறுதி மீதி ரூபா | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**1. மேலே 5 மற்றும் 6 மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான காரணத்தைக் காட்டுக.**

(1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2014.12.31 திகதியன்று பண மீதி .........................................

(2) ஏனைய காரணங்கள்- .................................................. .........................................

**2. மேலே5 இல் காணப்படுகின்ற மீதிகளின் இணைவை பின்வருமாறு விபரிக்குக.**

(1) கொடுத்துத் தீர்க்காத உப முற்பணம் ( முற்பணம் ) மொத்தம் .........................................

(2) கணக்குச் சுருக்கத்தைத் தயாரிப்பபிலுள்ள வழுக்கள் (இருப்பின்) .........................................

**இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.**

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்
திகதி :

குறிப்பு (iv )(அ)

## 2007/09/05 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2007/05 இல் (2) ஆம் பந்தியின் அறிவுரைகளுக்கு இணங்க இதுவரை மூடப்படாத பழைய வங்கிக் கணக்குகள் பற்றிய 2014.12.31 ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :
செலவினத் தலைப்பு இல:

| வங்கியின் பெயர் | கணக்கு இலக்கம் | 2014.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி | 2014/12/31 ஆம் திகதியன்று கணக்கு இலக்கத்தின் பிரகாரம் மீதி | இதுவரை கணக்குகளை மூடாமைக்கான காரணம் | கணக்குகளை மூடுவதற்கு இலக்கு வைக்கப்பட்டள்ள திகதி | இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.**

பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்
திகதி

# 2007/09/05 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2007/05 இல் (1) ஆவது பந்தியின் அறிவுரைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்ககள் பற்றிய 2014.12.31ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

**செலவினத் தலைப்பு இல:** **அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**

| வங்கியின் பெயர் | கணக்கு இலக்கம் | 2014/12/31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி (ரூபா.) | 2014.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி (ரூபா.) | 2014.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்) | இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.**

பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (ந
முதலெழுத்துக்களுடன் பெயர்
திகதி :

# 2014 - ஒதுக்கீட்டுக் கணக்குகளுக்கான கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்புகள்

**அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :**